**மூன்றாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்,**

**ஈரோடு மாவட்டம்**

**முன்னிலை: திரு.எஸ்.இராமச்சந்திரன், பி.எல்.,**

**மூன்றாம் கூடுதல் மாவட்ட நீதிபதி,**

**கோபிசெட்டிபாளையம்.**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09-ம் நாள் புதன்கிழமை**

**(திருவள்ளுவர் ஆண்டு 2057, பராபவ வருடம், வைகாசித் திங்கள் 26-ம் நாள்)**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.13/2020**

**(C.N.R.No.TNED08-000191-2020)**

| | |
|---|---|
| 1 | P.ஆனந்தன் |
| 2 | A.சபரிசெண்பகலட்சுமி |
| 3 | A.சஞ்சய் |
| 4 | இளவர்.A.திவ்யா என்கிற திவ்யாபூீ-க்காக அடுத்த சிநேகிதியும், தாயாருமான 2-ம் வாதி ஏ.சபரிசெண்பகலக்ஷ்மி …மேல்முறையீட்டாளர்/வாதிகள் |
| -எதிர்- | |
| 1 | K.A.பாஸ்கரன் |
| 2 | E.புஷ்பா |



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:30:46 +0930

| | |
|---|---|
| 3 | S.அர்த்தனாரிசாமி என்கிற ரவி |
| 4 | P.சக்திவேல் .. எதிர்மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் |

இம்மேல்முறையீடானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 1 மற்றும் பிரிவு 96 ன் கீழ் சத்தியமங்கலம், சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.78/2011 வழக்கில் 06.01.2020-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை நீதிமன்றத்தின் தரப்பினர்களின் விவரம்.**

| | |
|---|---|
| 1 | P.ஆனந்தன் |
| 2 | A.சபரிசெண்பகலட்சுமி |
| 3 | A.சஞ்சய் |
| 4 | இளவர்.A.திவ்யா என்கிற திவ்யாஸ்ரீ-க்காக<br>அடுத்த சிநேகிதியும், தாயாருமான 2-ம் வாதி ஏ.சபரிசெண்பகலக்ஷ்மி<br>… வாதிகள் |
| | -எதிர்- |
| 1 | K.A.பாஸ்கரன் |
| 2 | E.புஷ்பா |
| 3 | S.அர்த்தனாரிசாமி என்கிற ரவி |
| 4 | P.சக்திவேல் … பிரதிவாதிகள் |



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:30:54 +0930

இம்மேல்முறையீடானது மேல்முறையீட்டாளரால் ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் 09.03.2020-ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு மேல்முறையீட்டு எண்.26/2020 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, 13.03.2020 தேதியன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, 17.03.2020-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டு, 18.03.2020 ம் தேதியன்று மேல்முறையீட்டு எண்.13/2020 ஆக வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இம்மேல்முறையீடானது, இறுதியாக 21.04.2026-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.ஆர்.திருமலைச்சாமி அவர்களும், 1 முதல் 3 வரையிலான எதிர்மேல்முறையீட்டாளர்கள் இந்நீதிமன்றத்திற்கு வருகையின்மையால் ஒருதலைப்பாளர்களாக கருதப்பட்டும், 4 ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஏ. .முகமது முபாரக் அவர்களும், ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை, தீர்ப்பாணை மற்றும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:31:01 +0930

வழங்கிடும்,

**தீர்ப்புரை**

இம்மேல்முறையீடு சத்தியமங்கலம், சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.78/2011 வழக்கில் 06.01.2020-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த தாவாவானது, 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்படுத்திக் கொண்ட ஆவண எண்கள் 3389/2008, 1289/2011, 3390/2008, 1288/2011, 1289/2011 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய பத்திரங்கள் செல்லாது. அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி ஆவணங்களை ரத்து செய்யக் கோரி விளம்புகை பரிகாரமும், மேற்படி சொத்தில் 4 ம் பிரதிவாதி பெயரிலான தாவா சொத்து குறித்த கிரைய ஆவண எண்கள்.1288/2011. 1289/2011 அடிப்படையில் 4 ம் பிரதிவாதி விற்பனையோ, வில்லங்கமோ செய்யாதிருக்கும் பொருட்டும், அமைதியான சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்யாதிருக்கும் பொருட்டும் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் செலவுத் தொகையுடன் பிறப்பிக்கக் கோரி வாதிகளால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



S
RAMACHANDRAN

Digitally signed by
S
RAMACHANDRAN
Date: 2026.06.09
09:31:08 +0930

2) **<u>விசாரணை நீதிமன்றத்தில் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:-</u>**

1ம் வாதி 2ம் வாதியின் கணவர். 3, 4 வாதிகள் 1,2 வாதிகளின் குழந்தைகள். தாவாச் சொத்துக்களும், ஏனைய சில சொத்துக்களும் 1ம் வாதியின் தகப்பனாரான காலஞ்சென்ற பழனிச்சாமி கவுண்டருக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை அமைதியான அனுபவ சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்து, கடந்த 1994ம் ஆண்டு அவரது வாரிசுகளான 1ம் வாதி ஆனந்தன், மற்றொரு மகனான ஈஸ்வரமூர்த்தி மற்றும் மகள் விஜயா ஆகிய வாரிசுகள் அடைந்து அனுபவிக்கும் வண்ணம் வைத்துவிட்டு காலமாகிவிட்ட நிலையில், மேற்படி வாரிசுகள் ஒவ்வொருவரும் 1/3 பங்கு அடையத்தக்கவர்கள். 1ம் வாதியின் தாயாரும் காலமாகிவிட்டார். மேற்படி பழனிச்சாமி இறந்த பிறகு, இந்த 1-ம் வாதி, அவரது சகோதரர் ஈஸ்வரமூர்த்தி, அவரது சகோதரி விஜயா ஆகியவர்களுக்கிடையே கடந்த 13.04.2006-ல் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. அந்த பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படி இந்த 1-ம் வாதிக்கு B ஷெட்யூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அவரது அனுபவ சுவாதீனத்தில்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:31:15 +0930

அனுபவித்து வந்தார். அதில் பிரதிவாதிக்கு எந்தவித பங்கு பாத்தியதையோ, உரிமையோ கிடையாது. பாகக்கறார் தேதியிலிருந்து 1ம்வாதி தாவாச் சொத்தினை ஒரு 5 ஏக்கர் பரப்பளவிற்கு மல்லிகை பூச்செடி பயிர் செய்தும், தற்போது 4.44 ஏக்கர் அளவிற்கு கரும்பு பயிரிடமும் ஏற்பாடு செய்துள்ளார். இந்நிலையில், கடந்த 2006-ம் ஆண்டில், 1-ம் வாதிக்கு, கடுமையான பண நெருக்கடி மற்றும் பண தேவை இருந்ததால், சத்தியமங்கலம், நிலவள வங்கியில் கடன் வாங்க அணுகியதாகவும், அப்போது ஒரு பரணி என்பவரை சந்திக்க நேர்ந்ததாகவும், அவர் பவானியைச் சேர்ந்த, இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி, அர்த்தனாரிசாமி என்கிற ரவியை அணுகும்படி கூறியதாகவும், அதன் அடிப்படையில், 2006 ம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில், பவானியில் வைத்து, 3ம் பிரதிவாதியை இந்த 1ம் வாதி அணுகி, ரூ.2,00,000/-ம் கடன் கேட்டதாகவும், மேற்படி கடனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100/-க்கு ரூ.10/- வீதம் வட்டி கொடுக்க வேண்டுமென்றும், அவரது நண்பரான 1ம் பிரதிவாதியின் பெயருக்கு, ஒரு கிரய உடன்படிக்கை எழுதி கொடுக்க வேண்டுமென்றும், அந்த கிரய உடன்படிக்கையில், கிரையத் தொகை ரூபாய் 4 லட்சம் என்றும், முன்பணம் ரூபாய் 3 லட்சம் என்றும் குறிப்பிட வேண்டுமென்ற நிபந்தனைகளுக்கு ஒப்புக்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:31:26 +0930

கொண்டால், ரூபாய் 2 லட்சம் கடன் கொடுப்பதாக இந்த 3ம் பிரதிவாதி உறுதியளித்ததாகவும், முன் வைக்கப்பட்டுள்ளது. அதோடு, தாவா சொத்தைப் பொறுத்து மூல பத்திரங்களையும், பாகக்கரார் பத்திரத்தையும் ஒப்படைக்க வேண்டுமென்றும், கடன் தொகை ரூபாய் 2 லட்சத்தை ஓர் ஆண்டுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்ற நிபந்தனை வைத்ததாகவும், 3ம் பிரதிவாதி கூறிய நிபந்தனைகளை இந்த 1ம் வாதி , வேறு வழியின்றி ஒப்புக்கொண்டதாகவும், முன் வைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்த 1ம் வாதி, 3ம் பிரதிவாதியின் தகாத ஆளுமையின் அடிப்படையிலும், அவரது நிர்ப்பந்தத்தாலும், அவரது வார்த்தையை நம்பி, வேறு வழியின்றி பண தேவையை ஈடுசெய்வதற்காக கடந்த 31.05.2006 தேதியில் 3ம் பிரதிவாதியின் கையாளான 1ம் பிரதிவாதியிடமிருந்து, ரூபாய் 2 லட்சத்தினை பெற்றுக்கொண்டு, அவர்கள் கூறியபடி, கிரய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து, 1,2 வாதிகள் கிரய உடன்படிக்கை எழுதிக் கொடுத்து, 1,2 வாதிகள் கிரய உடன்படிக்கை எழுதிக் கொடுத்ததாக முன் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த கிரய உடன்படிக்கையினை நிறைவேற்றும் எண்ணத்துடனோ, நடைமுறைப்படுத்தும் எண்ணத்துடனோ, தாவா சொத்தை விற்க வேண்டுமென்ற எண்ணத்துடனோ, எழுதிக் கொடுக்கவில்லை. அந்த கிரய



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:31:32 +0930

உடன்படிக்கை பெயரளவிலானது. அதன்பிறகு 2006-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை, 3-ம் பிரதிவாதிக்கு, 1-ம் வாதி பெற்ற கடன் தொகைக்கு, வட்டி செலுத்தி வந்ததாகவும், மேற்படி 3-ம் பிரதிவாதி, வட்டிக்குக் பணம் கொடுக்கும் நபர் என்பதாலும், 1-ம் வாதியின், பலகீனங்களையும், தேவைகளையும், பரிதாபநிலையையும், பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மேலாண்மை பெற்றிருந்தாலும், செலுத்திய வட்டிப் பணத்திற்கு, ரசீது எதுவும் கொடுக்க மறுத்துவிட்டார். அதன் பிறகு விவசாய பூமிக்குத் தேவையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதாலும், விவசயாத்தில் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டதாலும், அசல் ரூபாய் 2 லட்சத்தையோ, அதற்கான வட்டியையோ, இந்த 1ம் வாதியால் செலுத்த இயலாமல் போய்விட்டது. அதனால், 2008-ம் ஆண்டு ஜுன் மாத வாக்கில், இந்த 3-ம் பிரதிவாதி, அசலையும், வட்டியையும் கேட்டு, மிகுந்த நெருக்கடி கொடுத்ததாகவும், ஆனால் இந்த 1-ம் வாதி, அவரது நிலைமையினைக் கூறி, கால அவகாசம் கேட்டதாகவும், ஆனால், 3 ம் பிரதிவாதி, அதற்கு மறுத்து, அவரது பெயருக்கு ஒரு கிரய ஆவணம் எழுதிக் கொடுக்கும்படி வற்புறுத்தியதாகவும், அதன் பிறகு கடந்த 09.07.2008-ம் தேதி, இந்த 3 ம் பிரதிவாதி, அவரது தாயாரான இந்த 2-ம் பிரதிவாதி, மற்றும் 3 ம் பிரதிவாதியின்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:31:39 +0930

அடியாட்களுடன் இந்த 1-ம் வாதியின் வீட்டிற்கு வந்து, 1ம் வாதியையும், 2ம் வாதியான அவரது மனைவியையும், ஒருசில பதிவு ஆவணங்களை 3ம் பிரதிவாதி சொல்லும் நபர்களின் பெயருக்குத் தாவா சொத்தினை பொறுத்து எழுதிக் கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு சத்தியமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தாக வேண்டும் என்றும், கட்டாயப்படுத்தி மிரட்டினார்கள். ஆனால், இந்த 1-ம் வாதியும், அவரது மனைவியும், அதற்கு உடன்படவில்லை. எனவே, இந்த 2ம் பிரதிவாதியும், மற்றும் 3ம் பிரதிவாதியும், அவர்களுடன் வந்த அடியாட்களின் துணையோடு, 1ம் வாதியையும், 2ம் வாதியான அவரது மனைவியையும், வலுக்கட்டாயமாக அவர்கள் வந்த காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு, தயாராக கொண்டு வந்திருந்த தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களிலும், வெற்றுத்தாள்களிலும், முத்திரைத்தாள்களிலும், 1, 2 வாதிகளிடம் கையெழுத்து மற்றும், கைரேகைகளையும் வலுக்கட்டாயமாக பெற்றார்கள். அப்போது, சார் பதிவாளரிடம், இதுகுறித்து முறையிட்டபோதும், அவர் எத்தகைய பதிலும் கூறாமல் சென்றுவிட்டதாகவும், அதன் பின்னிட்டு 2,3 பிரதிவாதிகளும், அவரது ஆட்களும், 1,2 வாதிகளை அவர்களது வீட்டிற்கு கொண்டு வந்து இறக்கிவிட்டுவிட்டு சென்றுவிட்டதாகவும், இதுபற்றி எங்காவது



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:31:46 +0930

முறையிட்டாலோ, காவல்துறையை நாடினாலோ, கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும், போலீசுக்குப் போனால், தயவு தாட்சண்யம் இன்றி வாதிகளையும், அவர்களது குழந்தைகளையும், கொன்று விடுவதாகவும் மிரட்டிவிட்டு சென்றதாகவும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>விசாரணை நீதிமன்றத்தில் 4 ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்:-</u>**

வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எதிர்வழக்குரையில் ஒப்புக்கொள்ளும் விவரங்களைத் தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். 4-ம் பிரதிவாதி தரப்பில் முன் வைக்கப்பட்ட எதிர் உரையில், வழக்குச் சங்கதிகளை வலுவாக மறுத்தும், இந்த பிரதிவாதி, 2,3 பிரதிவாதிகளிடம் உரிய மறு பயனக்காக கிரயம் பெற்ற கிரயதாரர், கிரய தேதிக்கு முன்பாக தாவா சொத்துக்கள் 2,3 பிரதிவாதிகளிடம் கிரயம் பெற்ற தேதியிலிருந்து , இந்த 4-ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களின் அனுபவம் உள்ளது. வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனுபவத்தைப் பொறுத்த ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு பின்னிட்டு, ஜோடிக்கப்பட்டவை. 4-ம் பிரதிவாதி, உரிய வில்லங்க சான்று பார்த்து கிரயம் பெற்றுள்ளார். தாவா



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:31:52 +0930

சொத்தில் சட்டப்பூர்பவமான, உண்மையான, உரிமையாளர் என்ற நிலையில், சுவாதீனத்தில் இருந்து வருகிறார். இந்த 4-ம் பிரதிவாதி, 1-ம் வாதியை பார்த்தது இல்லை. அவர் யார் என்ற 4-ம் பிரதிவாதிக்கு தெரியாது. சொத்தின் மதிப்பு பல மடங்கு உயர்ந்து விட்டதால், இந்த பிரதிவாதியிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கு வழக்கு மூலம் எதுவும் இல்லை. எனவே, தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) வழக்குரை, எதிர் வழக்குரையை பரிசீலனை செய்து வழக்கை தீர்மானிக்க கீழ்காணும் எழு வினாக்கள் வனையப்பட்டது.

1. 2-ம் பிரதிவாதி பெயரில் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?
2. 3-ம் பிரதிவாதி பெயரில் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. 4-ம் பிரதிவாதி பெயரில் கோரப்பட்டுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
4. 4-ம் பிரதிவாதி பெயரில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:31:59 +0930

5. வேறு என்ன பரிகாரம்?

5) இந்த வழக்கில் வாதி தரப்பில் 1-ம் வாதி, திரு.ஆனந்தன் என்பவர் வா.சா.1 ஆகவும், திரு.சக்திவேல் என்பவர் வா.சா.2 ஆகவும் திரு.பழனிச்சாமி என்பவர் வா.சா.3 ஆகவும், திரு.யுவராஜ் என்பவர் வா.சா.4 ஆகவும். திரு.விஷ்ணு என்பவர் வா.சா.5 ஆகவும். திரு.ராமன் என்பவர் வா.சா.6 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.51 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் 4-ம் பிரதிவாதி திரு.சக்திவேல் என்பவர் பி.வா.சா.1 ஆக, விசாரிக்கப்பட்டு 1 முதல் 17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

6) விசாரணை நீதிமன்றம் வாதிகளின் வழக்குரை, பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரை, சாட்சியங்கள் மற்றும் இருதரப்பு வாதங்களை ஆராய்ந்து இறுதியில், வாதிகளுக்கு எதிராக தீர்ப்பளித்துள்ளதால் மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின்பேரில்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:32:06 +0930

மனக்குறைவுற்ற வாதிகள் மேற்படி தீர்ப்பினை எதிர்த்து இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**7) மேல் முறையிட்டிற்கான காரணங்கள்:-**

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் சட்டத்திற்கு எதிராகவும், சாட்சியங்களின் தன்மைக்கும், வழக்கு பொருண்மைகளுக்கும் முரணானது. விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் தரப்பில் சமர்ப்பித்த சாட்சிகளை சரிவர பரிசீலிக்கவில்லை. 09.07.2008, 22.11.2008 தேதிகளிட்ட கிரைய ஆவணங்கள் விற்பனை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டதல்ல. மேற்படி ஆவணங்கள் நடைமுறைக்கு வரவில்லை. அவை கடன் பரிவர்த்தனைக்காக பொறுப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்களைப் பொறுத்து ரத்து செய்து தீர்ப்பளித்திருக்க வேண்டும். மேலும் மேல்முறையீட்டாளர் வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டு அவரது சாட்சியத்தின்படி 3 ம் எதிர்மனுதாரரிடமிருந்து கடன் பெற்றுக் கொண்டதாகவும், எனவே, சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டிய



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:32:12 +0930

அவசியம் ஏற்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளதை விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை. தாவாச் சொத்துக்கள் ரூ.2.1/2 கோடிக்கும் அதிகமாக மதிப்புள்ள நிலையில், அவற்றை மிக சிறிய தொகைக்கு விற்பனை செய்ய வேண்டிய அவசியமில்லை. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் நல்லெண்ணத்தின்பால் உரிய பிரதிபலன் செலுத்தி கிரையம் பெற்ற நபர்கள் அல்ல. வாதிகள் மேற்படி எதிர்மனுதாரருக்கு எதிராக கிரைய ஆவணங்களைப் பொறுத்து ரத்து செய்ய வேண்டுமென்ற பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி எதிர்மனுதாரர்கள் தங்களது எதிர்வழக்குரையில் கிரைய ஆவணங்களுக்கு அதரவாக எந்த சங்கதியும் முன்னிலைப்படுத்தவில்லை. மேற்படி எதிர்வழக்குரையில், வழக்குரை விவரங்களை மறுத்து மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எதிர்மனுதாரர்களின் எதிர்வழக்குரையில் தெளிவாக பிரதிவாதிகளுக்கு எந்தவித எதிர்வாதமும் இல்லை என்று தெரிய வருகிறது. பிரதிவாதிகள் தரப்பில் முன் வைத்த எதிர்வாதத்தின் அடிப்படையில், தாவா ஏற்றுக் கொண்டு தீர்ப்பளித்திருக்க வேண்டும். பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தாவாச் சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு முன்பாக அளவீடு செய்யவில்லை.



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:32:21 +0930

சொத்தில் கிணறு உள்ளதா, சொத்தின் சர்வே எண், அதன் 4 எல்லைகள், நீள அகலங்கள் எதுவும் கண்டு கிரையம் பெறவில்லை என்று ஒத்துக் கொண்டுள்ளார். மேற்படி கிரைய ஆவணங்களை நிரூபிக்க ஆவணங்களிலுள்ள சாட்சிகளை விசாரித்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்பதை நிரூபிக்கவில்லை. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68 ன்படி மேற்படி ஆவணங்கள் சாட்சிகள் மூலமாக நிரூபிக்க வேண்டிய ஆவணங்கள் என்றுள்ள நிலையில் ஒரு சாட்சியையாவது பிரதிவாதிகள் தரப்பில் விசாரித்து ஆவணங்களை நிரூபித்திருக்க வேண்டும். மேற்படி கிரைய ஆவணங்களுக்கு உரிய பிரதிபலன் செலுத்தப்பட்டுள்ளது என்பதை பிரதிவாதிகள் நிரூபிக்கவில்லை. எனவே, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிரான அனுமானத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். வா.சா2. தனது சாட்சியத்தில், வா.சா.ஆ.47, 48 ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டம் 65 பி-ன்படி வழங்கப்பட்டது என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கவில்லை. வா.சா.3 கிராம நிர்வாக அலுவலர் தனது சாட்சியத்தில் தெளிவாக 4 ம் எதிர்மனுதாரர் தாவாச் சொத்தின் அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்று சாட்சிமளித்துள்ளதை விசாரணை நீதிமன்றம் கருத்தில்



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:32:27 +0930

கொள்ளவில்லை. மேலும் வா.சா.5 மற்றும் வா.சா.6 சாட்சிகளின் சாட்சியங்களின்படி, வாதி தாவாச் சொத்துக்களின் ஆவணங்களை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்பதையும், தாவாச் சொத்தில் கரும்பு விவசாயம் செய்து மேற்படி கரும்பு விவசாயத்திற்காக பண்ணாரியம்மன் சுகர்ஸ் நிறுவனத்தின் மூலமாக வாதி பாரத வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்று நிரூபித்துள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறியுள்ளது. ஆவணங்கள் பதிவு செய்தால் மட்டுமே அவற்றை நிரூபித்ததாக எடுத்துக் கொள்ள இயலாது. எனவே, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட வேண்டும்.

8) இந்த மேல்முறையீட்டில் தீர்க்க வேண்டிய பிரச்சனைகள்:-

1. 2 ம் பிரதிவாதியின் பெயரில் 09.07.2008 தேதியில் பதிவாகியுள்ள கிரையப் பத்திரமும், 3 ம் பிரதிவாதியின் பெயரில் 09.07.2008 தேதியில் பதிவாகியுள்ள கிரையப் பத்திரமும் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் பெற மேல்முறையீட்டாளர்/வாதிகளுக்கு அருகதையுண்டா?

2. விசாரணை நீதிமன்ற தீர்ப்பும், தீர்ப்பாணையும் ஏற்கத்தக்கதா?



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:32:34 +0930

**9) பிரச்சனை 1க்கான தீர்வு :-**

மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது எழுத்துபூவர்மான வாதத்தில், வாதிகள், பிரதிவாதிகள் மீது பெயரில் ஏற்பட்டுள்ள கிரையப்பத்திரங்களை ரத்து செய்யவும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியும் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். 2006-ம் ஆண்டு தனது சூழ்நிலையின் கடன் பெற நிலவள வங்கிக்கு சென்ற போது பரணி என்பவரை சந்தித்த போது அவர் மூலம் 3-ம் பிரதிவாதியை அனுகியுள்ளார் என்ற விபரத்தை 3-ம் பிரதிவாதியே அவருடைய எதிர்வழக்குரை 4-வது பத்தியில் ஒப்புக் கொண்டுள்ளார். அதனை விசாரணை நீதிமன்றம் ஒப்புக் கொள்ளவில்லை. விசாரணை நீதிமன்றம் தனது தீர்ப்பின் 13-வது பக்கத்தில் 2 மற்றும் 3-வது லைனில் 50 ரூபாய் முத்திரை தாள்கள் இரண்டும், 1-ம் வாதி ஆணந்தன் என்பவரது பெயரில் கிரையத்திற்கு முன்தினமான 08.07.2008-ம் தேதியில் வாங்கப்பட்டதும், அது வாதியால் வாங்கப்பட்டது என்றும் கூறியுள்ளது. “உண்மையில் 3-ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் 2-வது பத்தியில் 08.07.2008-ம் தேதியில் உரிய முத்திரை தாள்கள் இந்த பிரதிவாதியால் வாங்கப்பட்டு, மேற்படி பத்திரங்கள் பதிவு



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:32:43 +0930

செய்யப்படுவதற்கு முன்பாக 1-ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டு கிரைய உடன்படிக்கை பத்திரமும் இரத்து செய்யப்பட்டு பதிவாகியுள்ளது என்று தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் தவறாக புரிந்து கொண்டு தீர்ப்பு வழங்கியுள்ளது." 1-ம் பிரதிவாதி வழக்குரைஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் ஒரு தலைபட்சபடுத்தப்பட்டுள்ளார் என்பதையும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் குறுக்கு விசாரனைக்கு ஏதுவாக தங்களை சாட்சிய விசாரணைக்கு உட்படுத்தவில்லை என்பதையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்ட காரணத்தினாலே அது உண்மையான ஆவணம் என்று தீர்மாணிக்க கூடாது என்று பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளது என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் பிரதிவாதிகள் நிருபிக்கடாத ஆவணங்களை பொருத்து தவறான தீர்ப்பினை வழங்கியுள்ளது. கடந்த 25.11.219-ம் தேதியில் பி.வா.சா.1-ன் குறுக்குவிசாரணையில், வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியாது என்றும், ஏக்கர் கணக்கில் விலைபேசி வாங்கவில்லை. மொத்தமாக வாங்கினேன் என்றும்,



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:32:50 +0930

கிரையம் பெற்ற பூமியின் செக்குபந்தி ஞாபகம் இல்லை, கிரையம் வாங்கிய பூமியின் அருகே ஏக்கர் எவ்வளவு ரூபாய் போகிறது என்று எனக்கு தெரியாது என்றும், என் பெயக்கு பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என்றும், 1-ம் வாதி போன வடிவிலான கேமராவில் பேசிய விபரங்களை தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்றும், Ex.A38 மற்றும் Ex.A39 ஆவணங்கள் வாதி மற்றும் 4-ம் பிரதிவாதி பேசியது சம்மந்தமாக உள்ள கூற்றுக்களை வா.சா.2 ஆன சாட்சியின் மூலம் நிருபணம் செய்யப்பட்டுள்ளதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. 1-ம் வாதிக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டின் முகவரிக்கு இந்த அசல் வழக்கிற்கு பின்னிட்டு ஸ்டேட் வங்கி மற்றும் வட்ட சட்ட பணிகள் குழு சத்தியமங்கலம் ஆகியவற்றில் இருந்து தபால்கள் வர பெற்று அதனை அவர் பெற்றுக் கொண்டுள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. கடந்த 30.05.2006-ம் தேதிய பொது அதிகார பத்திரத்தில் 1-வது சாட்சியான ராமசாமி தான் 31.05.2006-ம் தேதிய கிரைய உடன்படிக்கையிலும் அவரே சாட்சி கையொப்பம் செய்தும், மேற்படி கிரைய உடன்படிக்கை எழுதிப்பெற்ற பாஸ்கரனும் ஒரு சாட்சி கையொப்பம் செய்துள்ளதையும், மேற்படி இரண்டு



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:33:00 +0930

ஆவணங்களும் ஒரே ஆவண எழுத்தர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டுள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது. 09.07.2008-ம் தேதிய பொது அதிகார பத்திரத்தின் ரத்து பத்திரத்தில் 2-வது சாட்சி கையொப்பம் செய்த பி.எஸ்.செந்தில் என்பவர் அன்று நடைபெற்ற கிரைய உடன்படிக்கை ரத்து பத்திரத்திலும் மற்றும் கிரையப்பத்திரத்திலும் சாட்சி கையொப்பம் செய்துள்ளதையும், மேற்படி 3 ஆவணங்களும் ஒரே ஆவண எழுத்தரால் உருவாக்கப்பட்டுள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. 09.07.2008-ம் தேதிய பொது அதிகார பத்திரத்தின் ரத்து பத்திரத்தில் 1-வது சாட்சியாக, பவானியை சேர்ந்த சங்கமேஸ்வரன் மகன் ஒருவர் கையொப்பம் செய்துள்ளதும், 4-ம் பிரதிவாதி கிரையப்பத்திரத்தின் முதலாவது சாட்சியாக பவானியை சேர்ந்த சங்கமேஸ்வரன் (எ) ஈஸ்வரன் கையெழுத்து செய்துள்ளதையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. வாதிகளின் வழக்குரை, சாட்சிய விசாரணைகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமலும், மேற்படி Ex.A38 மற்றும் Ex.A39 ஆவணங்களை பொருட்படுத்தாமலும் விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பானது சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்புடையதல்ல.



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:33:08 +0930

எனவே, விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

9-2 மேற்படி வாதத்தை எதிர்த்து 4ம் எதிர்மேல்முறையீட்டாளர் /பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிகள் தங்களது வழக்குரையில் குறிப்பாக 09.07.2008 தேதியில் பதிவாகியுள்ள கிரையப் பத்திரங்களை ஒத்துக் கொண்டு மேற்படி கிரையப் பத்திரங்கள் கட்டாயப்படுத்தியும், மிரட்டியும் பெறப்பட்டது என்று கூறும் நிலையில், வாதிகள் மேற்படி கிரையப் பத்திரங்கள் பதிவு செய்த பின்னிட்டு, அதுகுறித்து உடனடியாக காவல் துறையினரிடம் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படியாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்கள் பதிவு செய்த நாளில் தங்களை கட்டாயப்படுத்தி, மேற்படி ஆவணங்கள் குறிப்பாக வா.சா.ஆ.4, மற்றும் வா.சா.ஆ.5 நிர்ப்பந்தப்படுத்தி எழுதிப் பெறப்பட்டது என்பதை சார்பதிவாளர் முன்பு எந்தவித புகாரும் கொடுக்கவில்லை. 2010ம் ஆண்டு தான் அவ்வாறு புகார் கொடுக்கப்பட்டு 2011ம் ஆண்டு நில அபகரிப்பு



S
RAMACHANDRAN
Digitally signed by
S
RAMACHANDRAN
Date: 2026.06.09
09:33:14 +0930

பிரிவிலும் புகார் கொடுக்கப்பட்டது. மேற்படி புகாரை விசாரித்த காவல்துறையினரும், வருவாய் துறையினரும் மேற்படி புகாரில் உண்மைத் தன்மை இல்லை என்று நிராகரித்துள்ளனர். மேற்படி வா.சாஆ.4, 5 கிரைய ஆவணங்கள் தங்களை கட்டாயப்படுத்தி, நிர்ப்பந்தப்படுத்தி, மோசடியாக கிரையம் பெறப்பட்டது என்பதை வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். வாதிகள் தரப்பில் வா.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருந்தாலுங்கூட, மேற்படி சாட்சிகள் அனைவரும் பிரதிவாதிகள் வாதிகளை கட்டாயப்படுத்தியும், நிர்ப்பந்தப்படுத்தியும், மிரட்டல் விடுத்தும் சொத்துக்களை வலுக்காட்டாயமாக எழுதி பெற்றுக் கொண்டார்கள் என்று நிரூபிக்காத நிலையில், விசாரணை நீதிமன்றம் இருதரப்பு வழக்குகள் மற்றும் ஆவணங்களை சரிவர விசாரணை செய்து வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது. மேற்படி தீர்ப்பானது எந்தவகையில் சட்டத்திற்கும், சங்கதிகளுக்கும் எதிரானது என்று மேல்முறையீட்டாளர் தரப்பில் எந்தவொரு ஏற்றுக்கொள்ளக்கூடிய சங்கதியும் முன்னிலைப் படுத்தாத நிலையில், மேல்முறையீடு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:33:21 +0930

9-3 இந்த நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும். இருதரப்பு வழக்குரை, எதிர்வழக்குரை, ஆவணம் மற்றும் வாய்மொழிச் சாட்சியங்களை ஆராய்கையில், தாவாச் சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டருக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டு அவர் காலமான பின்னிட்டு அவரது மக்களான 1ம் வாதியும், மற்றொரு மகனான ஈஸ்வரமூர்த்தி மற்றும் மகள் விஜயா ஆகியோர்களுக்கு வாரிசு வகையில் பாத்தியப்பட்டிருந்து 13.04.2006 ம் தேதியில் மேற்படியார்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படி 1ம் வாதிக்கு பி அட்டவணைச் சொத்து ஒதுக்கப்பட்டது என்பதைப் பொறுத்து இருதரப்பிலும் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வாதியின் வழக்குப்படி, 1ம் வாதிக்கு 2006 ம் ஆண்டில் கடுமையான பண நெருக்கடி இருந்ததால் சத்தியமங்கலம் நிலவள வங்கியில் சொத்தின்பேரில் அடமான கடன் பெற அணுகியதாகவும், அப்போது பரணி என்பவர் அறிமுகமான நிலையில், அவரிடம் பண தேவை குறித்து கூறியதாகவும், அவர் தனக்கு தெரிந்த நபரான பவானியைச் சேர்ந்த அர்த்தனாரிசாமி (எ) ரவியை அணுகும்படி கூறினார். மேற்படி நபரை 1ம் வாதி சந்தித்து கடன் தேவையை கூறி, ரூ. 2 லட்சம் கடன் கேட்டதாகவும், அதற்கு மாதம் ஒன்றுக்கு



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:33:28 +0930

ரூ.100/-க்கு ரூ.10/- வட்டி கொடுக்க வேணடுமென்றும், அவரது நண்பரான 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரைய ஒப்பந்தம் கொடுக்க வேண்டுமென்றும், மொத்த கிரையத் தொகை ரூ 4 லட்சம் என்று குறிப்பிட வேண்டுமென்றும், ரூ.3 லட்சம் முன் பணமாக பெற்றுக் கொண்டதாக குறிப்பிட வேண்டுமென்றும், மேற்படி நிபந்தனைக்கு ஒத்துக் கொண்டால் ரூ.2 லட்சம் கடன் கொடுப்பதாக கூறியதாகவும், மேற்படி தொகைக்கு கடன் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கும் பட்சத்திலும், வட்டி கொடுக்கும் பட்சத்திலும் கடன் கொடுப்பதாக உறுதியளித்தார். மேற்படி கடனை ஒரு ஆண்டு காலத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று நிபந்தனையும் விதித்தார். மேற்படி நிபந்தனையை 1ம் வாதி ஏற்றுக் கொண்டார். அதன்படி அசல் பத்திரங்களை ஒப்படைப்பதாகவும் ஒத்துக் கொண்டார். 1ம் பிரதிவாதி கடந்த 31.05.2006 ல் 3 ம் பிரதிவாதியின் கையாளான 1ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.2 லட்சத்தை கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து கடனாக பெற்றுக் கொண்டார். மேற்படி ஒப்பந்தம் விற்பனைக்கான நோக்கத்திற்காக ஏற்பட்டதல்ல, அது பெயரளவில் ஏற்பட்டது. டிசம்பர் 2007 மாதம் முதல் 3ம் பிரதிவாதிக்கு கடன் தொகை வட்டியை செலுத்துவதாக ஒப்புக்கொண்டபடி செலுத்தி வந்தார். வட்டித்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:33:34 +0930

தொகைக்கு ரசீது எதுவும் கொடுக்க மறுத்துவிட்டார். விவசாயத்தில் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டதால் 3ம்பிரதிவாதியின் கடனை 1ம் வாதி செலுத்த இயலவில்லை. இதனால் 2008ம் வருடம் ஜூன் மாதம் 3ம் பிரதிவாதி 1ம் வாதியை அணுகி அசல் மற்றம் வட்டியை உடனடியாக திருப்பிச் செலுத்தும்படி கடும் நெருக்கடி கொடுத்தார். வாதி சில கால அவகாசம் கேட்டும் 3ம் பிரதிவாதி மறுத்ததோடு கடனுக்காக அவர் பெயரில் கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்கும்டி வற்புறுத்தினார். வாதி காலஅவகாசம் கேட்டும் 3ம் பிரதிவாதி ஒத்துக் கொள்ளவில்லை. இதனிடையே, 09.07.2008ம் தேதி 2,3 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது அடியாட்களுடன் வாதி வீட்டிற்கு வந்து 1ம் வாதியையும்,அவருடைய மனைவியையும், ஒரு சில பதிவு ஆவணங்களை 3ம் பிரதிவாதி சொல்லும் நபர்களுக்கு எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தி மிரட்டினார்கள். அதற்கு 1ம் வாதி உடன்படவில்லை. எனவே, 2. 3 பிரதிவாதிகள் அவர்களது அடியாட்களின் துணையுடன் 1, 2 வாதிகளை வலுக்காட்டாயமாக அவர்களது காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம் முன்பு வந்து ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களிலும், வெற்றுத்



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:33:39 +0930

தாள்களிலும், முத்திரைத் தாள்களிலும் கையெழுத்து மற்றும் கைரேகைகளையும் வலுக்கட்டாயமாக பெற்றார்கள். மேற்படி ஆவணங்கள் எத்தகையது, என்ன தன்மை கொண்டது, என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை 1, 2 வாதிகள் தெரிந்து கொள்ள இயலவில்லை. 2, 3 பிரதிவாதிகள் அவர்களது ரௌடி ஆட்களுடன் இருந்ததால் பயந்து கொண்டு ஏதும் செய்ய இயலவில்லை. அப்போது அவர்கள் சில ஆவணங்களிலும் நோட்டுப் புத்தகங்கள், சில தாள்களில் கைரேகை, கையெழுத்து வாதிகளிடம் பெற்றுக் கொண்டனர். மேற்படி சம்பவம் குறித்து வெளியில் சொன்னால் காவல் துறையினரை நாடினால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும், அவர்களையும், அவர்களது குழந்தைகளையும் கொன்று விடுவதாக மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள் என்று குறிப்பாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் மேற்படி வழக்கினை மறுத்து 1. 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதிகள் தாவாச் சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்றும், 4ம் பிரதிவாதியே 28.02.2011 தேதியிட்ட கிரையப் பத்திரத்திற்கு பின்னிட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், 1ம் பிரதிவாதிக்கும், இந்த வழக்கிற்கும்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:33:47 +0930

சம்பந்தம் இல்லை என்றும், 3ம் பிரதிவாதிக்கும், அவரது தாயாரான 2ம் பிரதிவாதிக்கும் 09.07.2008 தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்பாக பரணி என்பவர் தாவாச் சொத்து விற்பனைக்கு வருகிறது என்று கூறிய நிலையில், பிரதிவாதி மேற்படி பரணியுடன் சொத்தினை 1ம் வாதிக்கு சுற்றி காண்பிக்க அதனை விலைக்கு வாங்க 3ம் பிரதிவாதி முடிவு செய்து ஒரு வாரம் கழித்து வாதியும், பரணி என்பவரும், பிரதிவாதியின் தந்தை முன்னிலையில் விலை பேசி முடித்துக் கொண்டார்கள். தாவாச் சொத்தைப் பொறுத்து வில்லங்கம் உள்ளதா என்று பார்த்த நிலையில், 1ம் வாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் 31.05.2006 தேதியில் ரூ.4 லட்சத்திற்கு சொத்தினை கிரையம் செய்து கொடுக்க பதிவு செய்யப்பட்ட கிரைய உடன்படிக்கை ஏற்பட்டிருந்ததின் அடிப்படையில், மேற்படி 1ம் பிரதிவாதி சொத்தினை கிரையம் பெற விருப்பமில்லை என்ற காரணத்தினால் இந்த பிரதிவாதிகள் சொத்தினை கிரையம் பெற முன் வந்து கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்த பின்னிட்டு 3ம் பிரதிவாதிக்கு ஆதரவாக கிரையப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது.

9-4 வாதிகள் தங்களது வழக்கினை நிரூபிக்க வா.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகளும், வா.சா.ஆ.1 முதல் 51 வரையிலான



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:33:55 +0930

சான்றாவணங்களும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் 17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9-5 வாதிகளின் வழக்குப்படி, குறிப்பாக 09.07.2008 தேதியிட்ட கிரையப் பத்திரம் 3ம் பிரதிவாதி சொல்லும் நபர்களின் பெயருக்கு தாவாச் சொத்தினை கிரையம் எழுதிக் கொடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தி மிரட்டி அடியாட்களுடன் சார்பதிவாளர் அலுவலகம் முன்பாக வந்து, ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களிலும், வெற்றுத் தாள்களிலும், முத்திரைத் தாள்களிலும் 2,3 பிரதிவாதிகள் கைரேகைகள், கையெழுத்துக்கள் வலுக்கட்டாயமாக பெற்றார்கள் என்பதை வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள். அவ்வாறு நிரூபிக்கும் வகையில் வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், 2006ம் ஆண்டு 1ம் பிரவிாதியிடம் பணம் கேட்டதாகவும், அவர் தோட்டத்தை பார்த்த பின்னிட்டு 3, 4 நாட்கள் கழித்து ஆவணங்களை அவரிடம் கொடுத்ததாகவும், அப்போது ரூ.2 லட்சம் கடன் பெற்றதாகவும், மேற்படி கடனுக்கு பாஸ்கர் பவர் எழுதி வாங்கிக் கொண்டதாகவும், வா.சா.1 தெளிவாக குறுக்கு விசாரணையில் ஒப்புக்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:34:02 +0930

கொண்டுள்ளார். மேலும் தன்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.44 கிரைய உடன்படிக்கை என்றும், மேற்படி உடன்படிக்கை 09.07.2008 தேதியில் ரத்து செய்யப்பட்டதாக ஒத்துக் கொண்டுள்ளார். அதே நாளில் தான் வா.சா.ஆ.3,4 ஆவணங்கள் 3ம் பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதிக் கொடுக்கப்பட்டதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9-6 வாதிகளால் தாக்கல் செய்துள்ள வழக்குரையில், தங்களை கட்டாயப்படுத்தி, மிரட்டி காரில் வைத்து வலுக்கட்டாயமாக ஆவணங்களில் கையெழுத்து பெற்றதாக கூறும் நிலையில் வாதிகளால் ஒத்துக் கொள்ளப்பட்ட வா.சா.ஆ.4, 5, 43 மற்றும் 45 ஆவணங்களை ஆராய்கையில், வா.சா.ஆ.43 ஆவணமானது, சார்பதிவாளர் முன்னிலையில் பகல் 4.05 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், வா.சா.ஆ.45 ஆவணமானது பகல் 3.04 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் வா.சா.ஆ.4 ஆவணமானது 3.04 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், வா.சா.ஆ.5 ஆவணமானது 3.04 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் உள்ளது. ஆக, வா.சா.ஆ.4, 5, 45 ஆவணங்கள் 3.04 மணிக்கு பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்குப்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:34:09 +0930

பின்னிட்டு வா.சா.ஆ.43 ஆவணம் சார்பதிவாளர் முன்பு 4.05 மணிக்கு பதிவுக்கு தாக்ல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் சார்பதிவாளர் முன்னிலையில் பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டு, சாட்சிகள் முன்னிலையில் எழுதி கொடுப்பவர், எழுதி பெற்றுக் கொள்பவர் இன்னார் என்று நிரூபிக்க சாட்சிகள் கையெழுத்திட்ட பின்னிட்டு பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆக, மேற்படி ஆவணங்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டதாகவே இந்த பதிவுகளிலிருந்து தெரிய வருகிறது. சட்டப்படியாக அதாவது பதிவுச் சட்டத்தின்படி ஒவ்வொரு ஆவணமும் சார்பதிவாளர் முன்னிலையில் பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி ஆவணம் பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும். அவ்வாறு பதிவுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணங்கள் அல்ல என்று உள்ள நிலையில், அதை ஆட்சேபிக்க ஆவணத்தை எழுதிக் கொடுக்கும் நபருக்கு உரிமை உண்டு. வாதிகள் தரப்பில் குறிப்பாக மேற்படி ஆவணங்கள் 2ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் அவர்களுடன் வந்த அடியாட்களின் துணையோடு 1ம் வாதியையும், 2ம் வாதியான அவரது மனைவியையும் வலுக்கட்டாயமாக அவர்கள் வந்த காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு சத்தியமங்கலம்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:34:16 +0930

சார்பதிவாளர் அலுவலகத்திற்கு முன்பாக வந்து சேர்ந்தார்கள். ஏற்கனவே மேற்படியார்கள் தயாராக கொண்டு வந்திருந்த தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களிலும், வெற்றுத் தாள்களிலும், முத்திரைத் தாள்களிலும் 1ம்வாதி மற்றும் 2ம் வாதியான அவரது மனைவியிடம் கையெழுத்து மற்றும் கைரேகைகள் வலுக்கட்டாயமாக பெற்றுக் கொண்டார்கள் என்று வாதம் செய்துள்ள நிலையில் எந்த சூழ்நிலையில் செய்ய நேரிட்டது. மேலும் அப்படி ஆவணங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள், சில தாள்களில் ரேகை மற்றும் கையெழுத்து வாதிகள் செய்ய நேரிட்ட சமயத்தில் இதுபற்றி அப்போது அவர்கள் முன்பு வந்த சார்பதிவாளர் என்று கூறப்பட்ட நபரிடம் 1,2 வாதிகள் ஆவணங்களில் கையெழுத்திட அல்லது கைரேகை வைத்திட எந்த உடன்பாடும் இல்லை என்றும், தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களில் காணப்பட்ட வாசகங்கள் என்னவென்றே அவர்களுக்கு தெரியாது என்றும், எப்படியோ ஒருவழியாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வாதிகள் முறையிட்ட போதும், அதற்கு அவர் எத்தகைய பதிலும் கூறாமல் சென்றுவிட்டார் என்று குறிப்பாக கூறியுள்ளார்கள். ஆக, வாதிகளின் வழக்குரையின்படியும், வா.சா1ன் குறுக்கு விசாரணையின்படியும், மேற்படி 1,2



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:34:22 +0930

வாதிகள் காரிலிருந்தபோது சார்பதிவாளர் காருக்கு அருகே வந்து மேற்படியார்களை பார்த்துவிட்டு போய்விட்டார் என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார். சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் செல்லவில்லை, சார்பதிவாளர் தங்களிடம் எதுவும் கேட்கவில்லை என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் சாதாரணமாக ஆவணம் பதிவு செய்த சமயத்தில், ஆவணத்தில் கண்டுள்ள நபர்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேட்டிலும் கைரேகை புத்தகத்திலும் கையெழுத்து மற்றும் கைரேகை இடுவார்கள். சாட்சிகளும் அதை ஊர்ஜீதப்படுத்துவார்கள் என்று உள்ள நிலையில், மேற்படி சட்டப்படியான நடைமுறைகள் எதுவும் நடைபெறவில்லை என்பதே வாதிகளின் வழக்காகும். அவ்வாறு சட்டப்படியான நடவடிக்கைகள் நடைபெறவில்லை என்பதைப் பொறுத்து சார்பதிவாளர் அலுவலக ஆவணங்களை நீதிமன்றத்திற்கு தருவித்து வாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை. மேற்படி நடவடிக்கைகளை எதிர்த்து வாதிகள் தரப்பில் காவல்துறையினர் மற்றும் வருவாய் அதிகாரிகளிடம் புகார் பதிவு செய்ததாக வா.சா.ஆ.17 முதல் வா.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.17 ஆவணமானது, மாவட்ட



S RAMACHANDRAN Digitally signed by S RAMACHANDRAN Date: 2026.06.09 09:34:32 +0930

ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட புகாராகும். வா.சா.அ.18 நில அபகரிப்பு காவல் துறையினரிடம் கொடுக்கப்பட்ட புகார். மேற்படி புகார்களின்பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை வாதிகளால் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆக வாதிகளால் முன்னிலைப்படுத்தியுள்ள வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 கிரையப் பத்திரங்கள் மோசடியாக 2,3 பிரதிவாதிகளால் உருவாக்கப்பட்டது என்று இருந்திருக்கும் நிலையில், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் அவ்வாறு எந்தவித நடவடிக்கையும் 2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக இதுநாள்வரை எடுக்கப்படவில்லை. சத்தியமங்கலம் சார்பதிவாளர் சட்ட நடவடிக்கைகளை பின்பற்றாமல் 2,3 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டார் என்று எண்ணுவது போன்ற குற்றச்சாட்டு எதுவும் வாதிகளால் மேற்படி சார்பதிவாளரின் உயரதிகளுக்கோ, அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ புகார் எதுவும் இல்லை. எனவே, சார்பதிவாளர் சட்டத்திற்குட்பட்டு தனது பணியின்பேரில் ஆவணங்களை பதிவுக்கு ஏற்றுக் கொண்டு பதிவு செய்துள்ளார். எனவே, மேற்படி ஆவணங்கள் 2,3 பிரதிவாதிகளின் கட்டாயத்தின்பேரிலும், நிர்ப்பந்தத்தின்பேரிலும் வாதிகளை பயமுறுத்தி



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:34:39 +0930

பெறப்பட்ட ஆவணங்கள் எனபதை உரிய சாட்சிகள் மூலமாக வாதிகள் நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.. எனவே, வா.சா.ஆ.4,5 ஆவணங்களின்பேரில் மேற்படி ஆவணங்கள் செல்லாது என்று வாதி எந்தவித பரிகாரமும் கேட்க இயலாது என்று இந்த நீதிமன்றம் இந்த பிரச்சனை.1க்கு தீர்வு காண்கிறது.

10) **பிரச்சினை2 க்கான தீர்வு:-**

ஏற்கனவே, இந்த நீதிமன்றம் எழுவினா 1ஐ பொறுத்து வாதி தனது வழக்கினை நிரூபிக்கவில்லை என்பதால் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மேலும் இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஆராய்கையில், விசாரணை நீதிமன்றம் உரிய வகையில் வாதியால் முன் நிறுத்தியுள்ள வழக்கு ஆவணங்களையும், சாட்சியங்களையும் ஆராய்ந்து, தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்கிறது. எனவே, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றியமைக்கும் வகையில் வாதி எந்த ஒரு சங்கதியும் இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.



S
RAMACHANDRAN

Digitally signed by
S
RAMACHANDRAN
Date: 2026.06.09
09:34:46 +0930

எனவே, விசாரணை நீதிமன்ற தீர்ப்பும், தீர்ப்பாணையும் ஏற்கத்தக்கது என்றும், அதனை தலையிடுவதில் இந்த நீதிமன்றத்திற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்றும் இந்த பிரச்சனை குறித்து முடிவு செய்கிறது.

11) இறுதியாக, இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. சத்தியமங்கலம், சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.78/2011-ல் 06.01.2020-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 09-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.09 09:34:52 +0930

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
கோபிசெட்டிபாளையம்

**<u>நகல்</u>:**

சார்பு நீதிமன்றம்,
சத்தியமங்கலம்.

அசல்/வரைவு தீர்ப்புரை

மே.மு.வ.எண்.13/2020

நாள் -09.06.2026

3 ம் கூடுதல் மாவட்ட

நீதிமன்றம், கோபி.

--------